## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2016

---

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 432) 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 6 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையால் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல், தெற்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடக்கு போன்ற மாகாணங்களின் பங்களிப்புப் பணம், நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிராததுடன் அவை பெறவேண்டிய பங்களிப்புப் பணமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பணம், ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பிலிருந்து செலுத்தப்படுவதுடன் அச் செலவினங்களை இனங்கண்டு நிதியத்தின் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரிவெனாக்கள் மற்றும் அரை அரச பாடசாலைகளின் ஆசிரியர்களின் ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்திற்கும் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அடிப்படைச் சம்பளத்தில் 6 சதவீதப்படி 12 சதவீதமான ரூபா 58,842,224 தொகை கல்வி அமைச்சிலிருந்து ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் நிதியத்தின் பங்களிப்புப் பணப் பெறுவனவில் நிதியத்திற்குரித்தற்ற ஆசிரியர்களின் ஓய்வூதிய நிதியத்திற்காக அறவிடப்பட்ட ரூபா 29,421,112 தொகையையும் உள்ளடக்கியிருந்தமையால் பங்களிப்புப் பணப் பெறுவனவு அதே அளவில் அதிகரித்துக் காண்பிக்கப்படுகின்றது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விதிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 9(அ) | கட்டளையின் பிரகாரம் ஒவ்வொரு உதவிப்பணம் செலுத்துபவர்களினதும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (அ) பந்தி | வருடாந்த பாதீடு விடயப்பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 102,956,197 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 89,644,498 ஆக இருந்ததமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 13,311,699 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் பங்களிப்புப்பணத்தை மீளச் செலுத்துதல் ரூபா 1,173,160 ஆல் அதாவது 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை, வட்டி வருமானம் ரூபா 2,671,525 இனால் அதாவது 6 சதவீதத்தாலும் மற்றும் பங்களிப்புப்பணப் பெறுவனவு ரூபா 11,069,424 ஆல் அதாவது 32 சதவீதத்தால் அதிகரித்தமையும் மிகையின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் அடிப்படையில் இந்த நிதி விளைவுகளில் மேலும் வேறுபாடு ஏற்படாது என கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புப்பணத்தின் மூலம் நிதியமொன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்படி செலவினத்தை மேற்கொண்டதன் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் புதிய அங்கத்துவத்தைப் பெற்றவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து அகற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கத்தவர்களின் பெயர், பாடசாலைகளை உள்ளடக்கிய பட்டோலை என்பன பேணப்படாதிருந்தமையால் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம், பெறப்பட்ட பணம் மற்றும் நிலுவைப் பணம் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பங்களிப்புப் பணம் செலுத்தும் முறைமையில் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு இயலுமான பிரகாரம் அந்தப் பிரிவிற்கு அந்தந்த மாதத்தின் பங்களிப்புப் பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட மற்றும் கையில் எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பங்களிப்புப்பணம் மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத் தொகையை வரலாற்றுத்தாளைப் பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அந்தப் பணம் சரியாக நிதியத்திற்குக் கிடைத்ததா என பரீட்சிப்பதற்கான முறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டு ரீதியான கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான செயற்பணியான ஆசிரியர்களின் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் செலவினம், பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் பங்களிப்புப்பண பெறுவனவு, பங்களிப்புப் பணம் மீளச் செலுத்துதல் மற்றும் முதலீட்டின் அடிப்படையில் வரிகளை செலுத்துதல் என்ற விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே முறையே 35 சதவீதம், 67 சதவீதம் மற்றும் 59 சதவீதம் என முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்மான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. நிதியத்தின் செயற்படு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிருக்காமையினால் கணக்கீட்டு கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியிருந்தது.